


முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் சிலைக்கு மாலை அணிவித்து, 102 கிலோ கேக் வெட்டி, 1500 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாநில அமைப்புசாரா ஓட்டுனர் அணி செயலாளர் செங்குட்டுவன், மாநில சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் சுகவனம், மாநில தீர்மானக் குழு உறுப்பினர் வெற்றிச்செல்வன், மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், மாநில பிரச்சாரக் குழு மகளிர் ஆணையர் குழு உறுப்பினர் மாலதி நாராயணசாமி, மாநில வர்த்தக அணி துணை செயலாளர் கே.வி.எஸ்.சீனிவாசன், மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசு மூர்த்தி, சந்திரன், பொருளாளர் கதிரவன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கிருபாகரன், பரிதா நவாப், செந்தில், பொதுக்குழு உறுப்பினர்கள் நாகராசன், பாலன், சித்ரா சந்திரசேகர், கோதண்டன் கிருஷ்ணகிரி கிழக்கு மேற்கு நகர கழக செயலாளர்கள் அஸ்லாம், வேல்மணி உள்ளிட்ட ஏராளமானோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

### பொறியியல் சேர்க்கைக்கு – கடந்த

# 29 நாட்களில் 2,90,678 மாணாக்கர்கள் பதிவு செய்துள்ளனர்!

## உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர் கோவி.செழியன் தகவல்!



சென்னை, ஜூன் 6 -

தமிழ்நாடு பொறியியல் சேர்க்கைக்கான விண்ணப்பப் பதிவு 07.05.2025 அன்று தொடங்கி வைக்கப்பட்டது. நேற்று (04.06.2025) வரை 2,90,678 மாணாக்கர்கள் விண்ணப்பப் பதிவு செய்துள்ளதாக உயர்கல்வி துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அமைச்சர் கோவி. செழியன் தெரிவித்துள்ளதாவது :-

கடந்த 07.05.2025 அன்று தமிழ்நாடு பொறியியல் சேர்க்கைக்கான இணையதள விண்ணப்பப் பதிவு தொடங்கப்பப்பட்டது. நேற்று (04.06.2025) மாலை 6 மணி நிலவரப்படி 2,90,678 மாணாக்கர்கள் விண்ணப்பப் பதிவு செய்துள்ளனர். இதில் 1,27,337 மாணவர்களும், 1,05,395 மாணவிகளும் ஆக மொத்தம் 2,32,732 மாணாக்கர்கள் விண்ணப்பக் கட்டணம் செலுத்தி உள்ளனர்.

இதுவரை விண்ணப்பிக்காத மாணாக்கர்கள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி, வரும் 06.06.2025 க்குள் www.tneaonline.org என்ற இணையதள முகவரியில் பொறியியல் சேர்க்கைக்கான தங்களது விண்ணப்பங்களை பதிவு செய்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. மேலும், விண்ணப்ப பதிவு செய்த மாணாக்கர்கள் தங்களது சான்றிதழ்களை 09.06.2025க்குள் பதிவேற்றம் செய்யுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

மாணாக்கர்களுக்கு ஏதேனும் விளக்கங்கள் தேவைப்படின் தமிழ்நாடு முழுவதும் 110 தமிழ்நாடு பொறியியல் மாணாக்கர் சேர்க்கை சேவை மையங்கள் (TFC Centres) நிறுவப்பட்டுள்ளன. அந்த சேவை மையங்களை தொடர்பு கொள்ளலாம் மற்றும் 1800 425 0110 என்ற கட்டணமில்லா தொலைபேசி எண் வாயிலாகவோ தொடர்பு கொண்டு தங்களது சந்தேகங்களை தெளிவுப்படுத்தி கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறேன்.

இவ்வாறு உயர்கல்வித் துறை அமைச்சர் கோவி. செழியன் தெரிவித்துள்ளார்.

### பெரம்பலூர் மாவட்டத்தில் ஊரகப் பகுதிகளுக்கான மூன்றாம் கட்ட மக்களுடன் முதல்வர் சிறப்பு முகாம்களில்

# 1,897 பயனாளிகளுக்கு ரூ.16.41 கோடி மதிப்பிலான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகள்!

## அமைச்சர் சி.வெ.கணேசன் வழங்கினார்! மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கிரேஸ் பச்சாவ், எம்.பிரபாகரன் எம்.எல்.ஏ., மாவட்டக் கழகப் பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் பங்கேற்பு!

பெரம்பலூர், ஜீன் 6 -

பெரம்பலூர் மாவட்டத்தில் ஊரக பகுதிகளுக்கான மூன்றாம் கட்ட மக்களுடன் முதல்வர் திட்ட சிறப்பு முகாம்களை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் சி.வெ.கணேசன் தொடங்கி வைத்து, பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்டு, 1,897 பயனாளிகளுக்கு ரூ.16.41 கோடி மதிப்பிலான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். பெரம்பலூர் ஊராட்சி ஒன்றியத்து க்குட்பட்ட எளம்பலூர், செஞ்சேரி, எசனை, லாடபுரம் மற்றும் ஆலத்தூர் ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட டி.களத்தூர் ஆகிய கிராமங்களில் பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்த நிகழ்ச்சிகளில் ஆட்சியர் கிரேஸ் பச்சாவ்,பெரம்பலூர் சட்டமன்ற உறுப்பினர் ம.பிரபாகரன், மாவட்ட கழக பொறுப்பாளர் அட்மா தலைவர் வீ.ஜெகதீசன் முன்னிலை வகித்தனர்.

இதில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை அமைச்சர் தெரிவித்ததாவது:

முதலமைச்சர் அவர்கள் மக்களுடன் முதல்வர் முகாம்களில் கலந்து கொண்டு பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்ய அறிவுறுத்தியுள்ளார்கள். அதற்காக எந்தெந்த ஊராட்சிகளில் கலந்து கொள்ள வேண்டும் என்ற விபரத்தினையும் தெரிவித்துள்ளார்கள். அந்த வகையில் எளம்பலூர், செஞ்சேரி, எசனை, லாடபுரம், டி.களத்தூர் ஆகிய ஊராட்சிகளில் நடைபெறும் மக்களுடன் முதல்வர் முகாமில் இன்று கலந்து கொண்டு 1,897 பயனாளிகளுக்கு ரூ.16.41 கோடி மதிப்பிலான பல்வேறு அரசு நலத் திட்ட உதவிகளை இன்று வழங்கியுள்ளோம்.

முதலமைச்சர் அவர்கள் விவசாயிகள், கூலித் தொழிலாளர்கள், கடைக்கோடி ஏழை எளியமக்கள், வறுமை நிலையில் விளிம்பு நிலையில் உள்ள மக்கள் என அனைத்து நிலை மக்களின் கோரிக்கைகளையும் கேட்டறிந்து அவற்றிற்கு 30 நாட்களுக்குள் தீர்வு காணேம் வகையில் மக்களுடன் முதல்வர் திட்டத்தை செயல்படுத்தியுள்ளார். பல்வேறு காரணங்களினால் நீண்ட நாட்களாக பட்டா மாறுதல் செய்ய முடியாமல் இருப்பது, தனி பட்டாவாக மாறாமல் இருப்பது, முதியோர் உதவித்தொகை பெற முடியாமல் இருப்பது, புதிய தொழில் தொடங்க கடனுதவி, மின் இணைப்பு கோருதல் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக வட்டாட்சியர் அலுவலகம் உள்ளிட்ட அரசு அலுவலகங்களுக்கு மக்கள் நேரில் சென்று அலைந்து சிரமப்படுவதை தவிர்க்கும் வகையில் மாவட்ட நிர்வாகமே மக்களைத் தேடி வந்து குறைகளை கேட்டறிந்து அவற்றை நிவர்த்தி செய்திடும் வகையில் மக்களுடன் முதல்வர் முகாம் திட்டம் செயல்படுத்தப்படுகின்றது.

இதற்காக மாவட்ட ஆட்சித்தலைவர் மாவட்ட வருவாய் அலுவலர் உள்ளிட்ட அனைத்து முதல் நிலை அலுவலர்களும் முகாம் நடைபெறும் ஊராட்சிகளில் பொதுமக்களை தேடி பொதுமக்களின் குறைகளை கேட்டறிந்து, தீர்வு காண்பதற்காக வருகை தந்துள்ளார்கள். பொதுமக்கள் தங்களது கோரிக்கைகளுக்காக அரசு அலுவலகங்களுக்கு சென்று அலைந்து திரிந்த காலம் மாறி தற்போது அரசு அலுவலர்களே அனைத்து பகுதி கிராமங்களுக்கும் சென்று பொதுமக்களின் கோரிக்கைகளை தீர்க்க வழிவகை செய்யப்பட்டுள்ளது. கலைஞர் மகளிர் உரிமை தொகை திட்டத்தின் கீழ் பயன்பெறாதவர்களில் தகுதியுடையோரை கண்டறியும் வகையில் சிறப்பு முகாம்கள் விரைவில் நடத்தப்படும்.

பொதுமக்கள் மற்றும் விவசாயிகள் அதிகம் பயன்பெறும் வகையில் வேளாண்மைத் துறை, ஆதிதிராவிடர் நலத் துறை, தாட்கோ, தொழிலாளர் நலத்துறை, சுகாதாரத்துறை, கூட்டுறவுத்துறை உள்ளிட்ட பல்வேறு அரசு துறைகளில் சார்பில் பொதுமக்களுக்கு பல்வேறு வகையான அரசு நலத்திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டங்களின் கீழ் பயன்பெற முடியாமல் இருக்கும் பயனாளிகள் தங்களது கோரிக்கையை மனுவாக வழங்கினால் முறையாக விசாரித்து அரசின் விதிமுறைகளுக்கு உட்பட்டு நலத்திட்டங்கள் கிடைத்திட வழிவகை செய்யப்படும்.

முதலமைச்சர் அவர்கள், குடும்பத்தலைவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம், புதுமைப் பெண் மற்றும் தமிழ் புதல்வன் திட்டத்தின் கீழ் அரசு பள்ளியில் 6ஆம் வகுப்பு முதல் 12 ஆம் வகுப்பு வரை பயின்று உயர் கல்வி பயிலும் மாணவ மாணவிகளுக்கு மாதந்தோறும் ரூ.1,000 உள்ளிட்ட பல்வேறு சிறப்பு வாய்ந்த திட்டங் களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். இத்திட்டங்களை மாணவ,மாணவியர் பயன்படுத்திக் கொள்ள வேண்டும். பொதுமக்கள் அனைவரும் தங்கள் பகுதிக்கு உட்பட்ட இடங்களில் நடைபெறும் மக்களுடன் முதல்வர் திட்ட முகாமில் கலந்துகொண்டு தங்களது கோரிக்கைகள் தொடர்பாக மனு கொடுத்து இந்த முகாமினை முறையாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

எல்லோருக்கும் எல்லாம் என்ற அடிப்படையில் மாண்பு மிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலான அரசு இதுபோன்ற முகாம்களை நடத்தி சிறப்பாக செயல்படுத்தி வருகிறது. எனவே பொதுமக்கள் அனைவரும் இந்த முகாம்களை பயன்படுத்தி பயன்பெற வேண்டும்.

இவ்வாறு தெரிவித்தார்.

நேற்று பெரம்பலூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட எளம்பலூர், இந்திரா நகர் ரோவர் மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற முகாமில் 463 நபர்களுக்கு ரூ.3,29,90,551 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், செஞ்சேரி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற முகாமில் 331 நபர்களுக்கு ரூ.3,23,23,779 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளையும், எசனை அரசு மேல்நிலைப் பள்ளி வளாகத்தில் நடைபெற்ற முகாமில் 270 நபர்களுக்கு ரூ.2,65,77,564 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும், லாடபுரம் அரசு உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற முகாமில் 394 நபர்களுக்கு ரூ.3,49,41,502 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும், டி.களத்தூர் அரசு உயர்நிலைப்பள்ளி வளாகத்தில் நடைபெற்ற முகாமில் 439 நபர்களுக்கு ரூ.3,72,50,566 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளும் என மொத்தம் 1,897 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை ப் பட்டா, மாற்றுத்திறனாளிகளுக்கு இணைப்பு சக்கரம் பொருத்தப்பட்ட பெட்ரோல் ஸ்கூட்டர், தாலிக்கு தங்கம், தையல் இயந்திரம், வெங்காயக் கொட்டகை அமைக்க ஆணைகள், வேளாண் இடுபொருட்கள் மற்றும் வேளாண் இயந்திரங்கள் என பல்வேறு திட்டங்களின் கீழ் ரூ.16,40,83,962 மதிப்பிலான பல்வேறு அரசு நலத்திட்ட உதவிகளை தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத்துறை அமைச்சர் வழங்கினார்கள்.

இந்நிகழ்வுகளில் அரசு உயரதிகாரிகள், அலுவலர்கள் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.



செம்மொழி நாள் முத்தமிழறிஞர் தலைவர் கலைஞர் பிறந்தநாளையொட்டி பொம்மிடி ஊராட்சி இந்திரா நகர் திமுக கிளைக்கழகம் சார்பில் நடைபெற்ற விழாவில் பாப்பிரெட்டிப்பட்டி மேற்கு ஒன்றிய கழக செயலாளர் பி.எஸ்.சரவணன் கலந்துகொண்டு கலைஞரின் திருவுருவப் படத்திற்க்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி, பொதுமக்களுக்கு நலத்திட்ட உதவிகள், அன்னதானம் வழங்கினார். இந்நிகழ்ச்சியில் ஒன்றிய கழக துணை ஜாகிதாசெரீப், ஒன்றிய இளைஞரணி செயலாளர் சானவாஷ்,மயில், நியாமத்,தினேஷ்,செல்வராஜ், ஹாபிஸ்,சரண்யா,தாரணி, ரஜினி,தயாளன் மற்றும் கழகத்தினர் கலந்து கொண்டனர்.




# தி.மு.க. இளைஞர் அணி

## இளைஞர் அணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அறிவிப்பு

### ஒன்றிய–நகர–பேரூர் புதிய நிர்வாகிகள் அறிமுகக் கூட்டம்!

நீலகிரி மாவட்டத்தில் நியமிக்கப்பட்டுள்ள இளைஞர் அணியின் புதிய நிர்வாகிகளுக்கான அறிமுகக் கூட்டம், மாவட்டச் செயலாளர், ஒன்றிய–நகர–பேரூர் செயலாளர்கள் முன்னிலையில், நடைபெற உள்ளது. புதிதாக நியமிக்கப்பட்ட இளைஞர் அணி நிர்வாகிகள் அனைவரும் தவறாமல், இக்கூட்டத்தில் கலந்துகொள்ளுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். அறிமுகக் கூட்ட விவரம் வருமாறு:

| நாள் | நேரம் | கழக மாவட்டம் | இடம் |
|---|---|---|---|
| 09.06.2025 திங்கள்கிழமை | காலை 11.00 மணி | நீலகிரி | பிரீத்தி கிளாசிக் டவர்ஸ், குன்னூர் சாலை, உதகை. |

### சட்டமன்றத் தொகுதி வாரியாக பாக இளைஞர்களுக்கு சமூக வலைத்தளப் பயிற்சி!

பாகத்திற்கு ஓர் இளைஞரைத் தேர்வு செய்து, சட்டமன்றத் தொகுதி வாரியாக சமூக வலைத்தளப் பயிற்சி வழங்கி வருகிறோம். மண்டலம்–1–இல் சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதியில் நடைபெறும் சமூக வலைத்தளப் பயிற்சி குறித்த விவரம் வருமாறு :

| நாள் | நேரம் | சட்டமன்றத் தொகுதி | இடம் |
|---|---|---|---|
| 08.06.2025 ஞாயிற்றுக்கிழமை | மாலை 4.00 மணி | சோழிங்கநல்லூர் | கைலாஷ் கார்டன், பழைய மகாபலிபுரம் சாலை, சோழிங்கநல்லூர், சென்னை. |

“அன்பகம்”
தேனாம்பேட்டை
சென்னை-18
நாள் : 04-06-2025

கலைஞர் 100 1924 - 2023

உதயநிதி ஸ்டாலின்
செயலாளர்,
தி.மு.க. இளைஞர் அணி


### முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட தி.மு.க. சார்பில்

# கலைஞரின் சிலைக்கு மாலை அணிவித்து, 1500 பேருக்கு நலத்திட்ட உதவிகள்!

## மாவட்டச் செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ. வழங்கினார்! டி.செங்குட்டுவன், இ.ஜி.சுகவனம் பங்கேற்பு!

கிருஷ்ணகிரி, ஜூன் 6 -

ஜுன் 3ம் தேதி செம்மொழி நாளான இன்று முத்தமிழ் அறிஞர் கலைஞரின் 102 வது பிறந்த நாளை முன்னிட்டு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக சார்பாக நலத்திட்ட உதவிகள் வழங்கி உற்சாகமாக கொண்டாடப்பட்டு வருகிறது.

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக அலுவலகத்தில் மாவட்ட செயலாளர் தே தே.மதியழகன் எம் எல்ஏ முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களது சிலைக்கு மாலை அணிவித்து மலர்தூவி மரியாதை செலுத்தினார் இதனைத் தொடர்ந்து கிருஷ்ணகிரி ராயக்கோட்டை ரோடு மேம்பாலம் அருகே உள்ள முத்தமிழறிஞர் கலைஞரின் திருஉருவ சிலைக்கு கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட செயலாளரும், பர்கூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினருமான மதியழகன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார்கள். இதனைத் தொடர்ந்து முத்தமிழறிஞர் கலைஞரின் பிறந்தநாளையொட்டி 102 கிலோ கேக் வெட்டி, 1500 பேருக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கியபோது மாவட்ட செயலாளர் பேசும்போது கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு ஒகேனக்கல் கூட்டு குடிநீர் திட்டத்தின் வாயிலாக கிருஷ்ணகிரி மக்களின் தாகத்தை தீர்த்தவர் நமது தலைவர் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்கள் முத்தமிழ் அறிஞர் வழியில் நமது முதல்வர் தற்போது சிறப்பான திட்டங்களை செயல்படுத்தி உலக நாடுகள் போற்றும் தலைவராக இருந்து வருகிறார் கலைஞரின் 102 வது பிறந்தநாள் கொண்டாடும் நாளில் தமிழகத்தில் 200 தொகுதிகளில் நாம் வென்றிட சபதம் ஏற்போம் என சிறப்பு ஆற்றி நலத்திட்ட உதவிகளை வழங்கினார்

இதனை அடுத்து கட்டிக் கானபள்ளி பி ஆர் சி அரசு உயர்நிலைப் பள்ளியில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து அங்கு பயிலும் மாணவ மாணவிகளுக்கு விளையாட்டு உபகரணங்களை வழங்கினார் பின்பு பர்கூரில் உள்ள தொழுநோய் மறுவாழ்வு மையத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவப்படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி அங்கு உள்ளவர்களுக்கு வேட்டி சேலை மற்றும் அறுசுவை உணவு வழங்கப்பட்டது. இதனை அடுத்து பர்கூரில் உள்ள பார்வையற்றோர் பள்ளி, மனவளர்ச்சி குன்றியோர் பள்ளி பள்ளியில் பயிலும் மாணவ மாணவியருக்கு அறுசுவை உணவு வழங்கப்பட்டது பர்கூர் பேருந்து நிலையத்தில் கேக் வெட்டி நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன மேலும் பர்கூர் சட்டமன்ற அலுவலகத்தில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார் இந்நிகழ்ச்சியில்

மாநில அமைப்புசாரா ஓட்டுனர் அணி செயலாளர் செங்குட்டுவன், மாநில சொத்து பாதுகாப்பு குழு உறுப்பினர் சுகவனம், மாநில தீர்மானக் குழு உறுப்பினர் வெற்றிச்செல்வன், மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், மாநில பிரச்சாரக் குழு மகளிர் ஆணையர் குழு உறுப்பினர் மாலதி நாராயணசாமி, மாநில வர்த்தக அணி துணை செயலாளர் கே வி எஸ் சீனிவாசன், மாவட்ட துணை செயலாளர்கள் கோவிந்தசாமி, சாவித்திரி கடலரசு மூர்த்தி, சந்திரன், பொருளாளர் கதிரவன், தலைமை செயற்குழு உறுப்பினர் கிருபாகரன், பரிதா நவாப், செந்தில், பொதுக்குழு உறுப்பினர்கள் நாகராசன் ,பாலன், சித்ரா சந்திரசேகர், கோதண்டன் கிருஷ்ணகிரி கிழக்கு மேற்கு நகர கழக செயலாளர்கள் அஸ்லாம், வேல்மணி, ஒன்றிய செயலாளர்கள் கோவிந்தன், தனசேகரன், தேங்காய் சுப்பிரமணி, மகேந்திரன், சாந்தமூர்த்தி, அறிஞர், ராஜேந்திரன், நரசிம்மன், குணவசந்த அரசு, எக்கூர் செல்வம், ரஜினி செல்வம் பேரூர் கழக செயலாளர்கள் தம்பிதுரை, வெங்கட்டப்பன் பேரூர் கழக பொறுப்பாளர்கள் பார்த்திபன், சாஜித் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் தினேஷ் ராஜன், ஜெயேந்திரன், ராஜசேகர், உள்ளிட்ட மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் ,தலைவர்கள்,துணைத்தலைவர்கள் துணை அமைப்பாளர்கள் வட்ட வார்டு கிளை செயலாளர்கள் BLA 2,BLC தோழர்கள் உள்ளிட்ட ஏராளமானோர் இந்நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டனர்.



திருவாரூர் மாவட்ட இளைஞர் அணியின் சார்பில் கலைஞர் அவர்களின் பிறந்த தினத்தில் திருவாரூர் அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் பிறந்த குழந்தைகளுக்கு தங்க மோதிரங்களையும், பரிசுப் பொருட்கள் அடங்கிய பெட்டகங்களையும் மாவட்ட செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., அணிவித்து வழங்கினர். மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் பனங்குடி. ஏ.எஸ்.குமார், நகர செயலாளர் வாரை.எஸ்.பிரகாஷ் மற்றும் இளைஞர் அணி நிர்வாகிகள் உள்ளிட்டோர் உடன் இருந்தனர்.



உதகை நகர திமுக சார்பில் உதகை நகர கழக செயலாளர் எஸ்.ஜார்ஜ் தலைமையில் முத்தமிழ் அறிஞர், கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாளை முன்னிட்டு முள்ளிக்கரை அன்பு அறிவு அறக்கட்டளை ஆதரவற்றோர் இல்லத்தில் உள்ளவர்களுக்கு ஒரு மாதத்திற்கான உணவு பொருட்களை மாவட்ட கழக பொறுப்பாளர் கே.எம். ராஜு வழங்கினார். இதில் கே.போஜன், ஜே.ரவிக்குமார், ஆர். இளங்கோவன், வாணீஸ்வரி ஆகியோர் முன்னிலை வகித்தனர். கிருஷ்ணன், ரீட்டா மேரி, ஜெயகோபி, அனில் குமார்உள்ளிட்ட கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.